**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 2 (LW 2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சுரேஷ் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | முருகன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2024.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

நான் தேனி அல்லிநகரம் கம்போஸ் ஓடைதெருவில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது தகப்பனார் ஆவார். எதிரிகளை தெரியும். இந்த சம்பவத்தில் எனது தாயார் பொன்னுத்தாய், என்னுடைய தங்கை சுதாலட்சுமி, எனது தங்கையில் கணவர் சென்ராயன், என்னுடைய தங்கையின் மகன் லோகுணி, என்னுடைய தங்கையின் மகள் அபிநயா ஆகியோர் விபத்தில் இறந்துவிட்டார்கள்.

2. கடந்த 04.03.2019 ம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் அல்லிநகரத்தில் இருந்தோம். உசிலம்பட்டி அருகில் உள்ள அய்யனார் கோவிலுக்கு குலத்தெய்வம் சாமி கும்பிடுவதற்காக அல்லிநகரத்தில் இருந்து இரண்டு ஆட்டோக்களில் கோவிலுக்கு கிளம்பினோம். ராமு என்பவர் ஒரு ஆட்டோவை ஓட்டினார். அதில் என்னுடைய அப்பா முருகன், என்னுடைய அம்மா பொன்னுத்தாய், எனது தங்கை சுதாலட்சுமி அவரது கணவர் சென்ராயன், அவர்கள் குழந்தைகள் லோகுமணி மற்றும் அபிநயா அந்த ஆட்டோவில் சென்றார்கள்.

3. சர்தார் என்பவர் ஓட்டிய ஆட்டோவில் நானும், எனது மனைவி பாண்டியம்மாள், எனது மகள் திவ்யா ஆகியோர்கள் சென்றோம். பிராதுகாரம்பட்டியில் உள்ள டீ கடையில் டீ சாப்பிட்டோம். ராமு என்பவர் ஓட்டிய ஆட்டோவில் இருந்து எனது அப்பா முருகன் என்பவர் இறங்கி சர்தார் என்பவர் ஓட்டிய ஆட்டோவில் ஏறினார்.

4. ஆண்டிப்பட்டி தாண்டி உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி செல்லும் போது ராமு என்பவர் ஓட்டிய ஆட்டோ மேற்கில் இருந்து கிழக்காகவும், அரசுப் பேருந்து கிழக்கில் இருந்து மேற்காகவும் இரண்டு வாகனங்களும் எதிர் எதிர் மோதிக்கொண்டது. ராமு என்பவர் ஓட்டிய ஆட்டோவும் பேருந்தும் அரசுப் பேருந்தில் மோதியது.

5. மேற்படி விபத்தில் ஆட்டோவில் சென்ற என்னுடைய அம்மா, என்னுடைய தங்கை சுதாலட்சுமி, எனது தங்கையின் கணவர் சென்ராயன் அவரது இரண்டு குழந்தைகள் லோகுமணி மற்றும் அபிநயா ஆகியோர்கள் காயம்பட்டு விட்டார்கள். எனது தாயார் காயம்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அன்று இரவு எனது தாயார் இறந்துவிட்டார். மற்ற நான்கு பேரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள்.

6. என்னுடைய தகப்பனார் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மற்றவர்கள் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பிரேத பரிசோதனை முடிந்து சாதி வழக்கப்படி ஈம கிரையங்கள் செய்தோம். ஆட்டோவும் அரசு பேருந்தும் வேகமாக வந்து மோதியதால் விபத்து ஏற்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2 வது எ.த.கு.வி:**

| | |
|---|---|
| கேள்வி | நீங்கள் தேனியில் குடியிருக்கிறீர்கள் என்றால்? |
| பதில் | ஆம் |
| கேள்வி | சுக்குவாடம்பட்டியில் உள்ள 2 வது எதிரியை சவ்வாரிக்கு யாரு அழைத்தார்கள் என்றால் ? |
| பதில் | எனது தங்கையின் கணவர் சென்ராயன். |
| கேள்வி | அல்லிநகரத்தில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினீர்கள் என்றால்? |
| பதில் | காலை சுமார் 06.00 மணியளவில் |
| கேள்வி | அல்லிநகரம் பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டீர்களா என்றால்? |
| பதில் | சரியல்ல |
| கேள்வி | உங்கள் வீட்டிற்கும் அல்லிநகரம் பஸ் நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால்? |

| | |
|---|---|
| பதில் | சுமார் 01.30 கி.மீட்டர் இருக்கும். |
| கேள்வி | போலீஸ் விசாரணையில் க.விலக்கில் டீ சாப்பிட்டோம் என்று சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | இல்லை |
| கேள்வி | பிராதிகாரம்பட்டி மதுரை ரோட்டில் இருந்து தெற்கு பக்கமாக 1 கி.மீட்டர் தள்ளியுள்ளது என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | பிராதிகாரம்பட்டியில் டீ கடை கிடையாது க.விலக்கில் மட்டும் தான் டீ கடை உள்ளது என்று சொன்னால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | உங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டு அல்லிநகரத்தில் இருந்து ஆட்டோவில் ஏறுவதற்கு எவ்வளவு நேரம் ஆனாது என்றால் ? |
| பதில் | அல்லிநகரத்தில் இருந்து ஆட்டோவில் ஏறவில்லை. |
| கேள்வி | உங்கள் ஆட்டோவுக்கும் முன்னால் சென்ற ஆட்டோவுக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால்? |
| பதில் | சுமார் 20 மீட்டர் இடைவெளியில் பயணித்தோம். |
| கேள்வி | 20 மீட்டர் இடைவெளியை இரண்டு ஆட்டோக்களும் சீராக வேகத்திலேயே சம்பவம் இடம் வரை பயணித்தது வந்தார்கள் என்றால் ? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | இரண்டாவது ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுநர் சர்தார் அதிவேகமாக ஓட்டவில்லை என்றால் ? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | விபத்து நடந்து ஆட்டோ தரையில் விழுந்த பிறகு தான் பார்த்தீர்களா? |
| பதில் | மோதும் போதே நான் பார்த்தேன். |
| கேள்வி | பின்னாடி நீங்கள் ஆட்டோவில் செல்லும் போது எங்களுக்கு முன்னால் சென்ற ஆட்டோவை கடந்து மேற்படி ஆட்டோவை கடந்து வரும் பஸ்சை உங்களால் பார்க்கமுடியாது என்றால்? |
| பதில் | பார்த்தேன். |
| கேள்வி | பஸ் ஆட்டோவின் மீது மோதியதை நீங்கள் பார்த்தீர்களா ? |
| பதில் | பார்த்தேன். |
| கேள்வி | ஆட்டோ வலது பக்கமாக கவிழந்துவிட்டது என்று சொன்னால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | சாலையின் நடுவில் உள்ள வெள்ளைக்கோட்டிற்கு வலது புறமாக ஆட்டோ சாய்ந்தது என்றால்? |

| | |
|---|---|
| பதில் | சரிதான் |
| கேள்வி | முன்னால் சென்ற ஆட்டோ ரோட்டின் நடுவே செல்லாமல் விலகி சென்றது என்றால்? |
| பதில் | விலகி தான் சென்றது. |
| கேள்வி | பஸ் ரோட்டில் உள்ள பிரவு கோட்டை கடந்து வந்து தான் ஆட்டோவின் மீது மோதியது என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | முதல் சீட்டில் அமர்ந்திருக்கும் ஆட்டோ ஓட்டுநர் விபத்து நடந்தால் முதல் இழப்பு அவருக்கு தான் என்று தெரியும் என்பதால் அவர் அஜாக்கிரதையாக ஆட்டோவை ஓட்ட வில்லை என்று சொன்னால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | விபத்து நடந்த போது சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்சை யார் அழைத்தார்கள் என்றால்? |
| பதில் | எனக்கு தெரியாது. |
| கேள்வி | சம்பவ நடந்த ஒரு அரை மணி நேரத்திற்கு பின்பு தான் 108 ஆம்புலன்ஸ் வந்தது என்றால்? |
| பதில் | 10 அல்லது 15 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. |
| கேள்வி | சம்பவ இடத்தில் இருந்து பாதிக்கப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்ப எவ்வளவு நேரம் ஆனாது என்றால் ? |
| பதில் | 10 அல்லது 15 நிமிடம் ஆனாது. |
| கேள்வி | 10 அல்லது 15 நிமிடத்தில் பாதிக்கப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்ப முடியாது என்றால் ? |
| பதில் | சரியல்ல |
| கேள்வி | நீங்கள் சம்பவ இடத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் சென்றீர்கள் என்றால்? |
| பதில் | நாங்கள் பயணித்த இரண்டாவது ஆட்டோவில் சென்றோம். |
| கேள்வி | நீங்கள் பயணித்த இரண்டவாது ஆட்டோவில் யார் யார் சென்றீர்கள் என்றால்? |
| பதில் | நான், எனது அப்பா முருகன், பாண்டியம்மாள், மகள் திவ்யா ஆகியோர்கள் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். |
| கேள்வி | நீங்கள் அனைவரும் அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது என்ன நேரம் இருக்கும் என்றால்? |
| பதில் | சுமார் 07.30 முதல் 07.40 வரை இருக்கும். |
| கேள்வி | அப்படி நீங்கள் மருத்துவமனைக்கு சென்ற பிறகு நாகராஜ் எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால்? |
| பதில் | நாங்கள் வந்து ஐந்து நிமிடம் கழித்து வந்தார். |

| | |
|---|---|
| கேள்வி | நடந்த விபத்தை நீங்கள் பார்க்கவில்லை பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்று சொன்னால்? |
| பதில் | சரியல்ல |
| கேள்வி | நீங்கள் பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்று சொன்னால்? |
| பதில் | சரியல்ல |

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.03.2024 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.03.18 17:50:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
18.03.2024.